# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

## மங்கள்யான் வெற்றி!!!




MANGAL VIJAY

‘என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில். ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்’ என்ற பாடல் வரிகளை மீண்டும் நிஜமாக்கும் வகையில் முழுக்க முழுக்க இந்தியர்களால், இந்தியா நாட்டில் உள்ள தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இந்தியாவில் உருவாக்கப் பட்ட மங்கள்யான் 24.09.2014 அன்று காலை 8 மணிக்கு சுற்று வட்ட பாதையில் இணைந்தது.

வல்லரசு நாடுகளாகிய அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வரிசையில் இந்தியா செவ்வாய் கிரகத்திற்கு செயற்கை கோளை வெற்றிகரமாக அனுப்பிய நாடு என்ற பெருமை பெறுகிறது. செவ்வாய் கிரகத்திற்கு செயற்கை கோளை அனுப்பிய முதல் ஆசிய நாடு நமது இது வரை உலகத்தில் 52 செயற்கை கோள்கள் அனுப்பப்பட்ட போதும் அதில் 22 மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. ஆனால் இந்த பயணத்தை தனது முதல் முயற்சிலேயே வெற்றிபெறச் செய்த முதல் நாடு நமது இந்தியா தான்.

2013, நவம்பர் 5ஆம் தேதி தனது 65 கோடி கிலோமீட்டர் தூர பயணத்தை துவங்கிய மங்கள்யான் 24.09.2014 அன்று காலை 8 மணிக்கு செவ்வாய் கிரகத்தின் சுற்று வட்ட பாதையில் வெற்றிகரமாக இணைந்தது. முழுக்க முழுக்க இந்திய விஞ்ஞானிகளால், இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட மங்கள்யானின் வெற்றி நமது நாட்டின் அறிவிற்கு கிடைத்திட்ட மிகப்பெரிய வெற்றி. 450 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய சாதனை இது. விண்வெளி தொழில் நுட்பத்தில் நமது நாட்டின் சுயசார்பு தன்மையை உலகிற்கிகு பறை சாட்டியுள்ள இந்த வெற்றிக்கு உழைத்திட்ட அடிமட்ட தொழிலாளர்கள் முதல் இஸ்ரோ விஞ்ஞானிகள் வரை அனைவரையும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மனமார வாழ்த்துகிறது. பாராட்டுகிறது.

இனியாவது நமது நாட்டின் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் தன்மையில் ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும் எனவும். இந்தியாவின் சுய சார்பு தன்மைக்கு வேட்டு வைக்கும் வகையில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் அறிமுகம் செய்திருக்கும் ‘தேசிய அறிவியல் தொழில் நுட்ப கொள்கை 2013’ல் அறிவியல் ஆய்வுத் துறையில் பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளை உள்ளே நுழைய அனுமதிக்கும் திட்டம் உள்ளது. இதனை செயல்படுத்தாமல் இந்த துறை அரசுத்துறையாகவே நீடிக்க செய்ய வேண்டும் என்பதே மங்கள்யான் காட்டும் பாதை.